RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 220 | ஆகஸ்டு.16 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## 80வது சுதந்திர தினம்: சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடி ஏற்றினார் முதல்வர் விஜய்

சென்னை: ஆக.16-

நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தள்தில் முதல்வர் விஜய் தேசியக் கொடியை ஏற்றினார்.

முன்னதாக, காவல் வாகனங்கள் புடைசூழ புனித ஜார்ஜ் கோட்டைக்கு முதல்வர் விஜய் வருகை தந்தார். அவரை தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர். இதையடுத்து, முப்படை உயர் அதிகாரிகளை முதல்வர் விஜய்க்கு, தலைமச் செயலர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக முதல்வர் விஜய்க்கு காவல்துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அணிவகுப்பை பார்வை யிட்ட முதல்வர் விஜய், சுதந்திர தின விழாவில் பங்கேற்க வருகை தந்துள்ள சபாநாயகர், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் கைகூப்பி வரவேற்றார்.

இதனையடுத்து, கோட்டை கொத்தளத்துக்குச் சென்ற முதல்வர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, கொடிக்கு மரியாதை செலுத்தினார். அப்போது தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

விழாவில், முதல்வர் விஜய்யின் தாய் சோபனா, தந்தை சந்திரசேகர், நடிகை த்ரிஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவில் சிறப்புரையாற்றிய முதல்வர் விஜய், "அனைவருக்கும் சுதந்திர தின நல் வாழ்த்துகள். தங்கள் உயிரை, உடமை, வாழ்க்கையை இழந்து நமக்காக சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த சுதந்திரப் போராட்ட தியாகிகள்,



இதில் பிரபலமானவர்கள், பெயர் தெரியாதவர்கள் என ஒவ்வொருவருக்கும் எனது வீர வணக்கங்கள்.

நாம் அடிமைப்பட்டுள்ளோம் என்ற எண்ணம் வந்தாலே மக்களிடையே ஒரு ஒற்றுமை வந்துவிடும். எல்லோரும் ஒரே மாதிரியாக யோசித்து ஒன்று சேர ஆரம்பிப்பார்கள். அப்படி ஒன்று சேரக்கூடிய இடத்தில்தான் சாதி உடையும், மதம் உடையும், மொழி, இனம் என எல்லாமே உடைந்து நொருங்கும்.

அப்படி உடைந்து நொருங்கக்கூடிய இடத்தில் இருந்து கிடைப்பதுதான் உண்மையான சுதந்திரம். அப்படித்தான் நமது மகாத்மா காந்தி தலைமையில் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி நமக்கு சுதந்திரம் கிடைத்தது. இன்று நாம் அந்த சுதந்திரத்தை கெட்டியாக பிடித்துக்கொண்டு படிப்படியாக முன்னேறி வந்து கொண்டிருக்கிறோம். இந்த முன்னேற்றத்தை நாம் அடுத்தடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமையும்கூட.

நமது தமிழ்நாட்டை லஞ்சம் மற்றும் ஊழலில் இருந்து காப்பாற்றுவதும் விடுதலைக்குச் சமமான ஒரு விஷயம்தான். அதை நோக்கித்தான் நமது அரசு செயல்பட்டு வருகிறது.

386 ஆண்டு பழமையான இந்த கோட்டையில், இந்த 80வது சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்றவும், உங்கள் மத்தியில் உரையாற்றவும் எனக்கு நீங்கள் வாய்ப்பை அளித்திருக்கிறீர்கள். அதற்காக, உலகம் முழுவதும் உள்ள எனது தமிழ் சொந்தங்களுக்கும் தமிழ்நாட்டு மக்களும், ஜென்சி இளம் சிங்கப்படை தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கோட்பாட்டை அடிப்படையாக வைத்துத்தான் தமிழ்நாட்டை லஞ்சம் லாவண்யம் அற்ற, போதைப் பொருள் கலாச்சாரம் இல்லாத, பெண்கள் பாதுகாப்பு, சமூக நீதி அடிப்படையில் வெளிப்படையான, நேர்மையான, உண்மையான நிர்வாகத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம்.

பொதுவாழ்வில் சமரசம் இருக்கவே கூடாது; மக்கள் நலன்தான் மிக மிக முக்கியம். அந்த அடிப்படை யில்தான் தவெக அரசு செயல்பட்டு வருகிறது. அதே அடிப்படையில்தான் மக்கள் நலன்சார்ந்த திட்டங்களில் நாம் மத்திய அரசோடு நிர்வாக ரீதியாக ஒத்துழைப்போடு இருக்கிறோம். அதே நேரத்தில் தமிழ்நாடு நலன் சார்ந்த விஷயங்களில் மாநில அரசுக்கு எதிரான மத்திய அரசின் முடிவுகளை தவெக அரசு எப்போதும் எதிர்க்கும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

முந்தைய ஆட்சிக் காலங்களில் கொண்டு வரப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை நமது அரசு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உதாரணத்துக்கு அம்மா உணவகம் திட்டம். இந்த திட்டத்தை நாம் இன்னும் மெருகேற்றி வருகிறோம். அதேபோல், காலை உணவு திட்டத்தை 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தி வரும் செப்டம்பர் 17ம் தேதி பெரியார் பிறந்த நாளில் தொடங்க இருக்கிறோம்." என தெரிவித்தார்.

## "சிறிய கனவுகள் இனி போதாது" : 80வது சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி: ஆக.16-

"சிறிய கனவுகள் இனி போதாது. நாம் பெரிய கனவுகளைக் காண வேண்டும். ஏனெனில் பெரிய கனவுகள் நமது சிந்தனையை விரிவுபடுத்தி, நமது தொலைநோக்குப் பார்வையின் எல்லையை அகலமாக்குகின்றன." என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு டெல்லி செங்கோட்டையில் மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதன் சில பகுதிகள்: இன்று ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக்கொடி, ஒவ்வொருவர் மனதிலும் மூவர்ணக்கொடி உள்ளது. இந்த சுதந்திர தினத்தில் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய மகாத்மா காந்தி மற்றும் அனைத்து சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் புரட்சியாளர்களுக்கு நான் எனது அஞ்சலியை செலுத்துகிறேன்.

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். சுதந்திரத்துக்குப் பிறகு செங்கோட்டையின் கொத்தளத்தில் இருந்து வந்தே மாதரம் பாடல் எதிரொலிக்கும் தருணம் இது. புதிய தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு தேசம் உற்சாகத்துடனும் ஆர்வமுடனும் முன்னேறி வருகிறது.

2047க்குள் வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்ற பெரிய கனவை இந்தியா கொண்டுள்ளது. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு வளர்ந்த நாடாக மாறத் தீர்மானிக்கும்போது அது நமது துணிச்சலின் அடையாளமாக அமைகிறது. உலகம் நம்மை மாறுபட்ட கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிறது.

கடந்த 12 ஆண்டுகளில் பாதுகாப்புத் துறை உற்பத்தி 4 மடங்கும், கதர் மற்றும் கிராமத் தொழில்துறை உற்பத்தி 5 மடங்கும், மின்னணு சாதன உற்பத்தி 7 மடங்கும் அதிகரித்துள்ளன.



அலைபேசி உற்பத்தி 33 சதவீதமும், டிஜிட்டல் பரிவர்த்தனை 100 சதவீதமும் வளர்ச்சியடைந்துள்ளன.

சிறிய கனவுகள் இனி போதாது. நாம் பெரிய கனவுகளைக் காண வேண்டும். ஏனெனில் பெரிய கனவுகள் நமது சிந்தனையை விரிவுபடுத்தி, நமது தொலைநோக்குப் பார்வையின் எல்லையை அகலமாக்குகின்றன. நமது உறுதிப்பாடு அசைக்க முடியாததாக இருக்க வேண்டும். உறுதிப்பாடு உறுதியாக இருக்கும்போது சிரமங்கள் மற்றும் பேரிடர்களுக்கு மத்தியிலும்கூட முன்னேறுவதற்கான வழியை உருவாக்கும் திறன் இயல்பாகவே உருவாகிறது.

சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும்போது அதாவது 2047ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்பதே நமது தொலைநோக்குப் பார்வை. நாம் அதை அடைய வேண்டும். நமது 140 கோடி மக்களின் கூட்டு முயற்சியாலும், அயராத உழைப்பு மனப்பான்மையாலும் இந்த இலக்கு எட்டப்படும்.

கடந்த 12 ஆண்டுகளில் எண்ணற்ற குடிமக்கள் தங்களின் அசைக்க முடியாத உறுதி மற்றும் அர்ப்பணிப்புடன் நாட்டை புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்ல தங்களால் இயன்ற அனைத்து வழிகளிலும் பாடுபட்டுள்ளனர். இத்தகைய முயற்சிகளை நான் மிகுந்த மரியாதையுடன் அங்கீகரிக்கிறேன்.

எரிசக்தி பாதுகாப்பு என்பது காலத்தின் கட்டாயமாகும். 2047க்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி உற்பத்தித் திறனை எட்டும் இலக்குடன் நாம் முன்னேறி வருகிறோம். இந்த தசாப்தத்தில் ஐந்து புதிய அணுமின் உலைகளை தொடங்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

நாடு சுதந்திரம் பெற்றது. அந்த சுதந்திரம் பல கனவுகளுடன் கூடியதாக இருந்தது. இருப்பினும், நம்மால் போதுமான வேகத்தையோ அல்லது உத்வேகத்தையோ பெற முடியவில்லை. நடக்கும்; நடந்துவிடும்; பார்த்துக்கொள்ளலாம் என்ற மனப்பான்மையிலேயே நாம் தேங்கிவிட்டோம்.

உலகம் முழுவதும் பலவீனமான ஐந்து நாடுகளின் பட்டியலல் நம்மை சேர்திருந்தது. அந்த சூழலிலும் கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா புதிய உத்வேகத்தைப் பெற்றுள்ளது. நாம் மிக வேகமாக முன்னேறி வருகிறோம். நமது 140 கோடி மக்களின் உறுதிப்பாடு எத்தகையது என்றால், நமது கூட்டுத் தீர்மானத்தையும் திறனையும் இனி எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

சாமானிய மக்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு இதே தீவிரத்துடன் பணியாற்றி உள்ளது. முன்பைவிட சராசரியாக ஆண்டுக்கு 15 மடங்கு வேகத்தில் குழாய் வழி குடிநீர் இணைப்புகளை வழங்கியுள்ளோம். முந்தைய ஆண்டு வேகத்தைவிட ஆறு மடங்கு வேகத்தில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழைகளுக்கான கழிப்பறைகளை ஆண்டுக்கு நான்கு மடங்கு வேகத்திலும், பின்தங்கிய பிரிவினருக்கு வீடுகளை மூன்று மடங்கு வேகத்திலும் கட்டிக் கொடுத்துள்ளோம்.

நிர்வாகத்திலும் நாடு மிகப் பெரிய மாற்றத்தைச் சந்தித்துள்ளது. ஆயிரக்கணக்கான விதிமுறைகள், நடைமுறைகள் நீக்கப்பட்டுள்ளன. காலாவதியான நூற்றுக்கணக்கான சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளன.

நவீன உள்கட்டமைப்பை உருவாக்க மெட்ரோ ரயில் வலைப்பின்னல்களை விரிவுபடுத்தினோம். பொதுப் போக்குவரத்து அமைப்பை வலுப்படுத்தினோம். இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேகம் மற்றும் அளவு ஆகியவை சுதந்திரத்துக்குப் பிறகு முதல்முறையாக காணப்பட்ட ஒரு மாற்றத்தை பிரதிபலிக்கின்றன. இவை அனைத்தும் கடந்த 10 ஆண்டுகளுக்குள் நிகழ்ந்தவை.

12 ஆண்டுகளுக்கு முன்பு, குழாய் வழி எரிவாயு வசதி 70 நகரங்களில் மட்டுமே இருந்தது. கடந்த 12 ஆண்டுகளில், இந்த எண்ணிக்கை 700 நகரங்களாக உயர்ந்துள்ளது. இன்று, நாட்டில் 1.75 கோடி குடும்பங்கள் குழாய் வழி எரிவாயு இணைப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுயசார்பு இந்தியா என்பது மிக முக்கியமானது. இந்தியா இனி மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கக்கூடாது; நாம் சுயசார்பு கொண்டவர்களாக மாற வேண்டும் என்பதே எங்கள் உறுதியான நம்பிக்கையாக உள்ளது. நாம் நமது சொந்தத் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் மற்றும் நமது நலன்களை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இந்த உறுதியுடன், 'சுயசார்பு இந்தியா' நோக்கி நாம் உறுதியாக முன்னேறி வருகிறோம். ஒவ்வொரு இந்தியரும் 'இந்தியாவில் உற்பத்தி செய்வது' (Make in India), 'சுதேசி' மற்றும் 'உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை' போன்ற முன்னெடுப்புகளுடன் இணைந்து வருகின்றனர்.

இன்றைய டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப உலகில், 'சிப்'களின் (semiconductor chips) அளப்பரிய முக்கியத்துவத்தை நாம் உணர்கிறோம். மின்னணுப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் அல்லது போக்குவரத்து அமைப்புகள் என எதுவாக இருந்தாலும், சிப்கள் இன்றியமையாதவை. அவை இல்லாவிட்டால் உலகம் ஸ்தம்பித்துவிடும். இத்துறையில் இந்தியா சுயசார்பை நோக்கி நகர்ந்துள்ளது. ஏற்கனவே மூன்று பெரிய செமிகண்டக்டர் ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் ஏற்றுமதிக்கான உற்பத்தி அந்த ஆலைகளில் தொடங்கிவிட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 78 ஆண்டுகளில், மேலும் ஐந்து முதல் எட்டு செமிகண்டக்டர் ஆலைகள் விரைவில் செயல்பாட்டுக்கு வரவுள்ளன.

கடந்த 1012 ஆண்டுகளில், நாம் பல ஆபத்துகளை எதிர்கொண்டுள்ளோம். கோவிட் பாதிப்பிலிருந்து நாம் மீண்டு வந்த உடனேயே, உக்ரைன் மற்றும் மேற்கு ஆசியப் பகுதிகளில் போர்கள் தொடங்கிய செய்திகள் வந்தன. பதற்றமான சூழல் நிலவியது. கணிப்பாளர்கள் என்னென்ன கணிப்புகளைச் சொன்னார்கள் என்பது இறைவனுக்கே வெளிச்சம்!

தடுப்பூசிகள் கிடைக்காது என்றும், நாட்டில் பெட்ரோல், டீசல் மற்றும் உரங்கள் கிடைக்காது என்றும் வதந்திகளைப் பரப்பி, நாட்டை அச்சத்தில் ஆழ்த்துவதில் சிலர் மகிழ்ச்சி அடைந்தார்கள். நாட்டில் பதற்றமான சூழலை உருவாக்குவதில் சிலர் மகிழ்ச்சி கண்டனர்.

இன்று நாடு கச்சா எண்ணெயைச் சார்ந்திருக்கிறது. இது ஒரு தவறான மனநிலையின் விளைவாகும். இந்த மனநிலை காரணமாக, நமது கடற்கரைப் பகுதியில் 99% பகுதி 'அணுகக்கூடாத பகுதி'யாக வகைப்படுத்தப்பட்டிருந்தது என்பதை அறியும்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கடலின் ஆழத்தில் ஆய்வு செய்வதை நாம் தவிர்த்திருந்தோம்.

அது சிந்தனை வறுமையின் அடையாளம். நிலைமை இப்படித் தொடரக்கூடாது என்று நாங்கள் முடிவு செய்தோம். ஒரு காலத்தில் 'அணுகக்கூடாத மண்டலங்களாக' இருந்த 99% பகுதிகளை, இப்போது 'செயல்பாட்டிற்கு உகந்த மண்டலங்களாக' நாங்கள் திறந்துவிட்டுள்ளோம். இப்போது நாம் ஆழ் கடல் ஆய்வு மற்றும் புதிய வளங்களைத் தேடும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

கடந்த ஆண்டு, இத்திசையில் ஒரு முக்கிய நடவடிக்கையாக 'சமுத்ரா மந்தன்' (Samudra Manthan) முயற்சியை நாங்கள் அறி வித்தோம். அண்மையில், இதற்காக ₹85,000 கோடி நிதியை ஒதுக்கி இப்பணிகளை விரைவுபடுத்தவும் முடிவு செய்துள்ளோம்.

இந்தியா ஒரு நிலையான அரசியல் ஆணையை; நிலையான அரசாங்கத்தை; துடிப்பான ஜனநாயகத்தை; வலுவான நீதித்துறையை; நம் அனைவரையும் வழிநடத்தும் அரசியலமைப்பைக் கொண்டுள்ளது. நாங்கள் சமீபத்தில் கையெழுத்திட்டுள்ள வர்த்தக ஒப்பந்தங்கள் எங்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகின்றன. நமது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs) இந்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்று நான் கூற விரும்புகிறேன். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



# செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் நிறுவனர் தின விழா

மாதவரம், ஆக.16-

மாதவரம் தொகுதி புழல் காவாங்கரை பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் நிறுவனர் தினம் மற்றும் பரிசளிப்பு விழா பள்ளியின் நிறுவனர் டி.எலிசபெத் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக புலவர் மு. ராமலிங்கம், சன் டிவி புகழ் பட்டிமன்றப் பேச்சாளர், டாக்டர் ஏ. விமலா, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நர்சிங் கல்லூரி முதல்வர் ரெபெக்கா, தமிழ்நாடு தடகள சங்க தடகள நடுவர், ஆய்வாளர் வசந்தராஜா, கவுன்சிலர் சேட்டு ஆகியோர் கலந்துகொண்டு தகுதி பெற்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 1.5 லட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

மேலும், 100% தேர்ச்சி முடிவுகளைப் பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டும் வகையில் தங்க நாணயங்கள் மற்றும் வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவின் நிறைவாக வெற்றியாளர்களுக்கு அதிகபட்சமாக 58,000 வரை ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு, இளம் திறமையாளர்கள் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டனர்.





# தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் சுதந்திர தின விழா

தேவகோட்டை, ஆக. 16-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் நாட்டின் 80 வது சுதந்திர தின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

கல்லூரி முதல்வர் முனைவர் கண்ணன் வரவேற்றார். ஆட்சிக் குழுத் தலைவர் அண. லெட்சுமணன் செட்டியார் தலைமையேற்று பேசுகையில், "பலரின் தியாகத்தாலும் கொடையுள்ளத்தாலும் கிடைத்த சுதந்திரத்தைப் பேணிக்காக்க ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். நம்மிடையே உள்ள ஒற்றுமையே இந்தியாவை வல்லரசாக்கும் வலிமை" என்றார்.

இந்த ஆண்டு பணி ஓய்வு பெறவுள்ள இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சௌந்தரம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, தேசிய மாணவர் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து பேசிய அவர், வீரமங்கை வேலுநாச்சியார், குயிலி ஆகியோரின் வீர வரலாற்றை எடுத்துரைத்தார். மாண வர்கள் அறிவுத்திறனை வளர்த்து, கல்வி மற்றும் அறிவியல் சாதனைகள் மூலம் இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என அறிவுறுத் தினார்.



இந்திய ராணுவத்தின் பல்வேறு தேசிய முகாம் களில் பங்கேற்ற தேசிய மாணவர் படை மாணவ ர்களின் சாதனைகளை என்சிசி அதிகாரி லெப்டினன்ட் மாரி அறிவித்தார். சாதனை மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டு பணி நிறைவு பெறும் சிறப்புநிலைத் தோட்டக்காரர் கருப்பையாவின் சேவையைப் பாராட்டி பொன்னாடை அணிவித்து கவுரவிக்கப்பட்டது. வணிகவியல் துறை உதவிப் பேராசிரியரும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலருமான முனைவர் காசி விஸ்வநாதன் நன்றி கூறினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இளங்கோ நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

விழா ஏற்பாடுகளை தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மற்றும் உடற்கல்வித் துறையினர் செய்திருந்தனர்.



# கிராண்ட்லையன் விஷ்ணுநகரில் சுதந்திர தினவிழா

மாதவரம், ஆக.16-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி விஷ்ணு நகர் குடியிருப்பு பொதுநல சங்கம் சார்பில் இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தினவிழா சங்க தலைவர் லெனின் தலைமையில் நடை பெற்றது.செயலாளர் ராமசந்திரன், பொருலாளர் தினேஷ்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு சங்க துனை செயலாளர் மாடசாமி கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.பின்னர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார். இதில் நிர்வாகிகள் சிவசங்கரன் ஒருங்கிணைப்பாளர் ஐய்யாத்துரை துனைத்தலைவர் முருககனேஷ், வெங்கடேசன் சிவகுமார் யுவராஜ் மற்றும் கிராம பொதுமக்கள் , அருணாசலம், கிருபாகரன்' ரவி, சுந்தரமூர்த்தி, ராமன்,சம்பத்.பிரசாந், அக்பர், அலெக்ஸ, ஜெபராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். முடிவில் கௌரவத்தலைவர் ஸ்டான்லிமோசஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# திருப்பரங்குன்றத்தில் இருந்து கட்டிக்குளம் வந்தடைந்த நவநீத பெருமாள்: திரளான பக்தர்கள் தரிசனம்



மானாமதுரை, ஆக.16-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் திருக்கூடலை நவநீத பெருமாள் வருகை தரும் நிகழ்ச்சி நடை பெற்றது. இங்கு மகா சித்தர் குட்டுக்கோல் மாயாண்டி சுவாமி முதல் ஜீவ ஒடுக்க கோவில் மற்றும் சீடருக்கு 48 நாட்கள் தவம் செய்து ஆயுள் விருத்தி செய்த தவசாலை அமைந்துள்ளது.

கட்டிக்குளம் சித்தர் குட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளால் திருப்பரங்குன்றம் திருக்கூடலை இராமலிங்க விலாசத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவநீத பெருமாள் பிரம்மோற்சவத்தை முன்னிட்டு, திருக்கூடலையிலிருந்து கடந்த ஜூலை 29 ஆடி பௌர்ணமி தினத்தில் நவநீத பெருமாள் புறப்பாடானது.

இப்பல்லக்கு மதுரை, ஆரப்பாளையம், கோரிப்பாளையம், வண்டியூர், திருப்புவனம், திருப்பாச்சேத்தி, முத்தனேந்தல், மானாமதுரை மற்றும் பல்வேறு கிராமங்களின் வழியே வலம் வந்து, மாயாண்டி சுவாமிகளின் அவதார இல்லம் மற்றும் கருப்பனேந்தல் மடத்தில் உள்ள தவச்சாலை முன் எழுந்தருளியது.

இதைத் தொடர்ந்து மடம் சார்பில் நவநீத பெருமாளுக்குச் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டு, சிறப்புப் பூஜைகள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து மாயாண்டி சுவாமிக்கும், குட்டுக்கோலுக்கும் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது.

இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிறைவாக, நவநீத பெருமாள் எழுந்தருளிய பல்லாக்கு தவசாலையை வலம் வந்து புறப்பட, பக்தர்கள் வழிபாடு செய்து வழியனுப்பி வைத்தனர்.







# ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் பால்குடம் எடுத்தல்

மாதவரம், ஆக.16-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் மதுர சிவந்தி ஆதித்தன் நகரில் பக்தர் களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் 36ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மற்றும் 7ம் தீமிதி திருவிழாவை முன்னிட்டு பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் செயல் தலைவர்கள் கந்தன், சரவணன், மோகன்குமார், செயலாளர் லோகநாதன் , பொருளாளர் பிரபு துணைத்தலைவர்கள் தீனா, காலேந்திரன், விக்னேஷ், சுரேஷ், துணைச்செயலாளர்கள் , சேகர், வினாயகமூர்த்தி, சௌந்தரராஜன், மணிகண்டன், கலையரசன், கௌரவ ஆலோசகர்கள் பாலசுப்பிரமணியம், கஜபதி, ஆலய முன்னாள் காப்பாளர்கள் சிவபெருமாள், சண்முகம், சுப்பையா உட்பட ஆலய அனைத் துநிலை நிர்வாகிகள். கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆலமரம் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிறசியில் பால்குடம் சுமந்தவாறு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சென்றடைந்தனர். பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்று வட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.





# மேலூர் கிராமம் அருள்மிகு ஸ்ரீ திருவுடையம்மன் சமேத ஸ்ரீ திருமணங்கீஸ்வரர் ஆலயத்தில் ஆடிப்பூரம் தினத்தை முன்னிட்டு பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி

மாதவரம், ஆக.16-

பொன்னேரி தொகுதி மீஞ்சூர் அடுத்த மேலூர் கிராமத்தில் இச்சாசக்தியாக பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ திருவுடைய ம்மன் சமேத ஸ்ரீ திருமண ங்கீஸ்வரர் ஆலயத்தில் ஆடிப்பூரம் தினத்தை முன்னிட்டு உலக மக்கள் நன்மை மகள் வேண்டி பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி ஆன்மீக சிந்தனை யாளர்கள் அசோகன், பார்த்த சாரதி, ஜானகிராமன், சங்கர், தவமணி மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மேளதாளத்துடன் சுமார் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிறசியில் பால்குடம் சுமந்த வாறு ஆலய மாடவீதி உலாவந்து பின்னர் சுக்குலாநந்தன் குருக்கள் அம்மன் மூலமந்திரங்கள் முழுங்க மூலவர் திருவுடைய ம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து மகா தீபாரா தனை காண்பிக் கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு வளையல் மற்றும் வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்க ப்பட்டது. இதில் ஆலய பொறுப் பாளர்கள், சுற்று வட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றிவைத்து, அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.



■ சுதந்திர தின விழாவை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மோகன் சிறப்பாக பணியாற்றியமைக்காக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார், பாராட்டு சான்றிதழையும் கேடயத்தையும் வழங்கி பாராட்டினார்.

# கும்மிடிப்பூண்டியில் கல்லூரி மாணவரை வெட்டி கொலை செய்த நண்பர் கைது

கும்மிடிப்பூண்டி, ஆக.16-

கும்மிடிப்பூண்டி அடுத்த சானாபுத்தூரில் கல்லூரி மாணவர் ரஞ்சன்(18) என்பவரை வெள்ளிக் கிழமை வெட்டி கொலை செய்த அவரது நண்பரான காமேஷ்(21) என்பவரை பாதிரிவேடு போலீஸார் கைது செய்தனர்.

கும்மிடிப்பூண்டி அடுத்த சானாபுத்தூரை சேர்ந்த ராஜா மஞ்சு தம்பதியரின் மகன் ரஞ்சன். இவர் ப்ளஸ் டூ முடித்து சென்னை பச்சையப்பா கல்லூரியில் முதல் ஆண்டு சேர்ந்தார். இந்நிலையில் ரஞ்சன் நண்பர்களோடு சேர்ந்து மது அருந்துவது, நண்பர்கள் சேர்ந்து பொழுதை கழிப்பது என கல்லூரிக்கு கூட தொடர்ந்து செல்லாமல் இருந்தார்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை அப்பகுதியில் உள்ள சுடுகாட்டில் சமாதி ஒன்றின் மீது ரஞ்சன் வெட்டி கொலை செய்யப்பட்ட நிலையில் கிடந்தார். அந்த வழியே சென்றவர்கள் இது குறித்து அறிந்து மாதிரி காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தனர். தொடர்ந்து பாதிரிவேடு போலீசார் சம்பவ இடம் விரைந்து ரஞ்சனின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் இந்த கொலை சம்பவம் குறித்து திருவள்ளூர் எஸ்.பி சாய் பிரனீத் , கும்மிடிப்பூண்டி டிஎஸ்பி சசிதரன், மற்றும் வெங்கடேசன், ஆரம்பாக்கம் இன்ஸ்பெக்டர் வீரமணி ஆகியோர் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் வியாழக்கிழமை இரவு ரஞ்சன் அவரது நண்பர் காமேஷூடன் அப்பகுதியில்



காமேஷ் ரஞ்சன்

உள்ள சுடுகாடு பகுதியில் மது அருந்தியது தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் இது தொடர்பாக சானாபுத்தூரை சேர்ந்த காமேஷை கைது செய்து விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் வியாழக்கிழமை இரவு ரஞ்சன், அவரது நண்பரான காமேஷூடன் மேற்கண்ட சுடுகாட்டு பகுதியில் காமேஷி ன் தாயாரின் சமாதி மீது அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்ததாகவும், அப்போது காமேஷ் அவரது மனைவியை தகாத முறையில் ரஞ்சன் பேசியதால்ஆத்திரத்தில் அவரது தாயாரின் கல்லறையில் மறைந்து வைத்திருந்த அரிவாளால் அவரது ரஞ்சனை வெட்டி கொன்றது சமாதி மீதே அவரது உடலை வைத்ததாகவும் தெரியவந்தது.

தொடர்ந்து போலீஸார் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட காமேஷின் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சானாபுத்தூர் பகுதியில் கஞ்சா விற்பனை அமோகமாக நடைபெறுவதாகவும் இதன் காரணமாக அப்பகுதியில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து சட்ட விரோத செயல்கள் நடைபெறுவதாகவும் கூறும் அப்பகுதி இளைஞர்கள் கஞ்சா பழக்கத்திற்கு ஆளானதன் காரணமாக காரணமாக இது போன்ற குற்ற சம்பவங்கள் நடைபெறுவதாக கூறி, சானாபுத்தூரில் கஞ்சா புழக்கத்தை கட்டுப்படுத்தி, கஞ்சா விற்பவர்களை கைது செய்ய வேண்டும் என தெரிவித்தனர்.







## விளாங்காடுபாக்கம் ஊராட்சி அரசு பள்ளிகளில் சுதந்திர தினவிழா கொண்டாட்டம்

மாதவரம், ஆக.16-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் இந்திய திருநாட்டின் 80 வது சுதந்திர தினவிழா பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் புழல் ஒன்றிய திமுக செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் மற்றும் முன்னாள் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பாரதிசரவணன் ஆகியோர் கலந்துகொண்டு தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர். பின்னர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினர். மேலும் பள்ளி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் சக ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





## பழனி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா விமரிசை: சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் தேசியக்கொடி ஏற்றினார்

பழனி, ஆக.16-

பழனி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா மிக விமரிசையாகக் கொண்டாப்பபட்டது. இவ்விழாவில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் கலந்து கொண்டு, தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, அங்கு திரண்டிருந்த அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்து இனிப்புகளை வழங்கினார்.

இவ்விழாவில் வட்டாட்சியர் மங்கல பாண்டியன், ஊராட்சி ஒன்றிய ஆணையர் குப்புசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபு பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் அதிமுக ஒன்றிய மற்றும் நகர சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் இதில் திரளாகக் கலந்து கொண்டனர்.

மேலும் நம்பிக்கை சிறைகள் அறக்கட்டளையின் சார்பாக சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது . மேலும் விழாவில் முன்னாள் ராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர் நிறைவில் நிர்வாகிகள் போதை இல்லா தமிழகத்தை உருவாக்குவோம் என உறுதிமொழி ஏற்றனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் கானத்தூரில் AIMIM அகில இந்திய மஜ்லிஸ் இ இத்திஹாதுல் முஸ்லிமின் கட்சி சார்பில் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தேசிய கொடியேற்றும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் கானத்தூர் அப்துல்ரகுமான் தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டத் தலைவர் தாம்பரம் SRA இப்ராஹிம் தேசிய கொடி ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் இதில் கானத்தூர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## அம்பத்தூர் இசக்கியம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரம் நிகழ்ச்சி அம்மனுக்கு வளைகாப்பு

மாதவரம், ஆக.16-

அம்பத்தூர் அடுத்த கள்ளிக்குப்பம் ஓம்சக்தி நகர் இராஜாஜி தெருவில் அமைந்துள்ள அருள்மிகு இசக்கியம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரம் விழா ஆலய நிர்வாக செயலாளர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மன் மற்றும் விநாயகர், திருவள்ளுவர், ஔவையார் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின் இசக்கியம்மனுக்கு வளையல்கள் மற்றும் வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார, கிராம பொதுமக்கள் கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.



## குன்னூரில் 80வது சுதந்திர தின விழாவில் தேசியக்கொடியை குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் ஏற்றினார்

நீலகிரி, ஆக.16-

நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்றத்துக்கு உட்பட்ட குன்னூர் நகரில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட திமுக பொறுப்பாளருமான ராஜு தேசிய கொடியை ஏற்றி வைத்து அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன இந்த நிகழ்ச்சியில் மாவட்ட. நகர. ஒன்றிய திமுக நிர்வாகிகள் பொதுமக்கள். வியாபாரிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு கலைக் கல்லூரி, விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.. உடன் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிருந்தா மாவட்ட வருவாய் அலுவலர் சு.வாசுகி கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் உட்பட பலர் உள்ளனர்..

## மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் ஆசிரியர்கள் மாணவர்கள் பாதிக்கப்படுவதாக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



தாம்பரம், ஆக.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பகுதியில், அரசு பள்ளி ஆசிரியர்களை மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் அதிகளவில் ஈடுபடுத்துவதால் மாணவர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு பாதிக்கப்படுவதாக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கோவிலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றும் 60 ஆசிரியர்களில் 56 பேரை மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கு அனுப்பியுள்ளதாகவும், இதனால் பள்ளியில் கண்பார்வை குறைபாடு கொண்ட நான்கு ஆசிரியர்கள் மட்டுமே பணியில் உள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன் காரணமாக, குறிப்பாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன், பள்ளிக்கு வரும் மாணவர்களின் பாதுகாப்பிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தலைவர் கு. தியாகராஜன், தாம்பரம் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியரிடம் புகார் அளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தார்.

அப்போது பேசிய அவர், மாணவர்களின் நலனில் அக்கறை காட்டாமல் பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் செயல் படுவதாக குற்றம்சாட்டினார். ஒரு பள்ளியில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்களை ஒரே நேரத்தில் கணக்கெடுப்பு பணிக்கு அனுப்புவதால் கற்பித்தல் பணியும், மாணவர் கண்காணிப்பும் கடுமையாக பாதிக்கப்படுவதாக கூறினார்.

மேலும், ஒரு பள்ளியில் பல பாட ஆசிரியர்கள் இருக்கும் நிலையில், சரி விகிதமாக பணிகளை ஒதுக்காமல், 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கு பாடம் நடத்தும் ஆசிரியர்கள் மற்றும் பெண் ஆசிரியர்களையே அழுத்தம் கொடுத்து அனுப்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையை கண்டித்து ஆசிரியர்கள் மட்டுமின்றி ஜாக்டோ ஜியோ அமைப்புகளுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

ஏற்கனவே தேர்வுப் பணி, தேர்தல் பணி உள்ளிட்ட பல்வேறு அரசுப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவதால் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருவதாகவும், இதன் நேரடி தாக்கம் அரசு பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தில் பிரதிபலிக்கும் என்றும் கு. தியாகராஜன் தெரிவித்தார்.

கல்வியில் ஏற்கனவே பின்தங்கியுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில், இந்த நிலை மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் கவலை தெரிவித்தார்



■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார். மாவட்ட எஸ்பி அனிதா, மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா ஆகியோர் உடன் இருந்தனர்.







## கிருஷ்ணகிரியில் சுதந்திர தின விழா கொண்டாட்டம்: கலெக்டர் தினேஷ்குமார் தேசிய கொடியேற்றினார்

கிருஷ்ணகிரி, ஆக.16-

கிருஷ்ணகிரியில் இன்று (15ம் தேதி) நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலெக்டர் தினேஷ்குமார் தேசிய கொடியை ஏற்றினார்.

நாடு முழுவதும் சுதந்திர தின விழா இன்று (15ம் தேதி) சிறப்பாக கொண்டாடப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் சார்பில் சுதந்திர தின விழா, கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் காலை 9.05 மணிக்கு நடைபெற்றது. இந்த விழாவில் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சுதந்திர போராட்ட தியாகிகளை கவுரபடுத்தினார். அதைத் தொடர்ந்து அரசு அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.240 பயனாளிகளுக்கு 2,19,36,265 மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் சிறப்பாக பணியாற்றிய மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழும், கேடயங்களும் வழங்கினார். விழாவில் பள்ளி மாணவ, மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் மாவட்ட எஸ்பி. அனிதா,மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான்,கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் வேலுமணி, நமச்சிவாயம், டிஎஸ்பிக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சுதந்திர தின விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதான வளாகத்தில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.





# அசூர் தேனேரிபட்டியில் சுதந்திர தின விழா



அசூர், ஆக.16-

மக்கள் நல்வாழ்வு சமூகப் பாதுகாப்பு அமைப்பு சார்பில், திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா அசூர் தேனேரிபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சுதந்திர தின விழா நடைபெற்றது.

நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனையின் படி, பொதுச் செயலாளர் ஆதிலட்சுமி ஆனந்தராஜ் தலைமையில் தேசியக் கொடியேற்றப்பட்டது. குழந்தைகளுக்கு நோட்டு, பேனா, இனிப்புகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

தலைமை ஆசிரியர் அந்தோணி எட்வர்ட் ராஜ், ஆசிரியர்கள் திலகவதி, பூங்குயில் மற்றும் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



# திருப்புவனம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் கொடியேற்றம்

சிவகங்கை, ஆக.16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி க்குட்பட்ட திருப்பு வனம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில், சட்டமன்ற உறுப்பினர் துரை இளங் கோவன் நேற்று தேசியக் கொடியேற்றினார். இந்நி கழ்வில் போக்குவரத்துக் கழக நிர்வாகிகள், தவெக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



# ஒக்கூரில் 10 விதவைப் பெண்களுக்கு ஆடுகள் வழங்கல்

சிவகங்கை, ஆக.16-

சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் அருகேயுள்ள வின்னரசி சமூக சேவை மையத்தில் 80ஆவது சுதந்திர தின விழா நடை பெற்றது. இதையொட்டி பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட ஆடு வளர்ப்பு வாழ்வாதாரத் திட்டம் தொடங்கி வைக்கப் பட்டது.

வின்னரசி சமூக சேவை மையம், ஹோப் எவர் ஃபவுண்டேஷன் மற்றும் புனித ஜோஸப் அறக்கட்டளை ஆகியவை இணைந்து செயல்படுத்திய இத்திட்டத்தின் கீழ், பர்மா காலனி, அண்ணாநகர் ஏ மற்றும் பி காலனிகள், சோழபுரம், மேலமங்கலம், ஒக்கூர் ஆகிய ஆறு கிராமங்களைச் சேர்ந்த 10 விதவைப் பெண்களுக்கு தலா ஓர் ஆடு வழங்க ப்பட்டது. வின்னரசி சமூக சேவை மையம் மற்றும் மனநலப் பராமரிப்பு மறுவாழ்வு மையத் தலைவர் அருட்சகோதரி எல்.ஜெயாமேரி தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலக குழந்தைகள் நலக்குழுவைச் சேர்ந்த ராமச்சந்திரன் சிறப்பு விருந் தினராகப் பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் மகளிர் குழு ஒருங்கிணைப்பாளர் விமலா, அருட்சகோதரிகள் ஜூலியஸ் மேரி, டொமினிக், ஆரோக்கிய மேரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பெண்களுக்கான அரசுக் கடன் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் குறித்து விளக்க ப்பட்டதுடன், சுயதொழில் மூலம் குடும்ப வருமானத்தை உயர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. ஆடு வளர்ப்பின் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டி நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவது குறித்து பயனாளிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. “உதவி வழங்குவது மட்டுமல்ல; நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதே எங்களது நோக்கம்” என மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது. வின்னரசி சமூக சேவை மையத்தின் வாழ்வாதார முயற்சியைப் பயனாளிகள் மற்றும் சுற்றுவட்டாரக் கிராம மக்கள் பாராட்டினர்.





# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் சுதந்திர தின விழா கோலாகலம்



காளையார்கோவில், ஆக.16-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 80 ஆவது சுதந்திர தின விழா கோலாகலமாக நடைபெற்றது. பள்ளித் தலைமையாசிரியர் சுரேஷ் தலைமை வகித்து தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து, ‘மகிழ் முற்றம்’ அமைப்பின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து அணிகளைச் சேர்ந்த மாணவர்களின் கம்பீர அணிவகுப்பு நடைபெற்றது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தி, சுதந்திர தின உறுதிமொழி ஏற்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாக, மாணவர்கள் மூவர்ணத் துணிகளுடன் தேசியக் கொடி வடிவில் நின்று நடத்திய கூட்டு உடற்பயிற்சி பார்வையாளர்களைக் கவர்ந்தது. மழலையர் வகுப்பு மாணவர்கள் காந்திஜி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், ஜவகர்லால் நேரு, வீரமங்கை வேலுநாச்சியார், பாரத மாதா, ராணுவ வீரர் மற்றும் காவல்துறை அதிகாரி வேடங்களில் பங்கேற்று பாராட்டைப் பெற்றனர். மேலும், தமிழ் மற்றும் ஆங்கிலப் பேச்சு, தேசப் பற்றுப் பாடல்கள், கவிதைகள், பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புற நடனங்கள் நடைபெற்றன. நிகழ்ச்சியை ஆசிரியை சகாய செல்வி தொகுத்து வழங்கினார். தலைமையாசிரியர் சுரேஷ் பேசுகையில், மாணவர்கள் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாற்றை அறிந்து, ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுவதுடன் புதிய தொழில்நுட்பங்களை ஆக்கப்பூர்வமாகக் கற்று முன்னேற வேண்டும் என அறிவுறுத்தினார்.

ஆசிரியர் காளீஸ்வரன் நன்றி கூறினார். தேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது. மாணவர்கள், பெற் றோர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மேலா ண்மைக் குழு உறுப்பினர்கள், முன் னாள் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம மக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



# சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் தந்திர தின விழா

சிவகங்கை, ஆக.16-

நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் நகர்மன்றத் தலைவர் சீம. துரை ஆனந்த் காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் அசோக்குமார், நகர்மன்றத் துணைத் தலைவர் கார் கண்ணன், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், மகேஷ், வீரகாளை, கிருஷ்ணகுமார் மற்றும் நகராட்சி அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து, 48 காலனி நகராட்சிப் பள்ளி மற்றும் லண்டன் கிட்ஸ் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் பங்கேற்ற மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் நகராட்சிப் பணியாளர்களுக்கு நகர்மன்றத் தலைவர் சீம. துரை ஆனந்த் நினைவுப் பரிசுகளை வழங்கி, சால்வை அணிவித்துக் கவுரவித்தார்.

விழாவின் நிறைவில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. நகர்மன்ற உறுப்பினர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நகராட்சி அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



# மானாமதுரையில் 200 பேருக்கு அன்னதானம்

சிவகங்கை, ஆக.16-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் 80ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழக நகர் மாணவரணி அமைப்பாளர் குமார் ஏற்பாட்டில் 200 பேருக்கு நேற்று அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கட்சியின் மூத்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற அலுவலகத்தில் 80 வது சுதந்திர தின விழா முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினர் துரை இளங்கோவன் தேசிய கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார் தவெக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.



# பொன்மார் ஊராட்சி போலச்சேரியில் 80-வது சுதந்திர தின விழா

பொன்மார், ஆக.16-

செங்கல்பட்டு மாவட்டம், திருப் போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சி, போலச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி யில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு கொடி யேற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பாக நடை பெற்றது. இந்நிகழ்வில் பொன்மார் ஊராட்சி மன்ற தலைவர், நாராயணன் கலந்து கொண்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப் புகள், நோட்டு புத்தகங்கள், பேனா வழங்கி நடைபெற்ற சுதந்திர தின விழாவில் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



# சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுரப்பாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

மதுரப்பாக்கம், ஆக.16-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட மதுரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் (ஆகஸ்ட் 15) 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர், மு.வேல்முருகன் மற்றும் (மதுரப்பாக்கம், அகரம் தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம்) ஒன்றிய கவுன்சிலர்.,வழக்கறிஞர். அமுதா வேல்முருகன் ஊராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் தேசியக் கொடியை ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சுதந்திர தின விழாவில் பள்ளி குழந் தைகள் கலை நிகழ்ச்சி பாட்டு போட்டி, வினா விடை குழந்தைகளுக்கு பரிசுகள் அளிக்கப் பட்டு விழாவை சிறப்பாக கொண் டாடினர். தொடர்ந்து ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் கிராம சபை கூட்டம் ஊராட் சியில் உள்ள அனைத்து வாக்காளர்களும் கலந்து கொண்டு ஆலோசனை மற்றும் பல்வேறு கோரிக் கைகள் நிறை வேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். ஊராட்சி செயலர், மக்களின் கோரிக் கைகள் நிறைவேற்றப்பட்ட பட்டியல் விவரங்களை ஊராட்சி மக்களிடம் படித்து காண்பித்த பிறகு மீண்டும் பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து சிறப்பாக கிராம சபை கூட்டம் நடைபெற்றது. உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி வார்டு உறுப்பி னர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சுதந்திர தின நல்வாழ் த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161